# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
## தவணைப் பரீட்சை, யூலை - 2015
## Term Examination, July - 2015

FWC

| தரம் :- 12 (2016) | கிறிஸ்தவம் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

❖ **மிகச்சரியான விடையினைத் தெரிவு செய்க.**

1) திருவிவிலியத்தின் மொழிபெயர்ப்புத் தொடர்பாக தூய எரோமின் பங்களிப்பாவது
1. திருவிவிலியத்தை எபிரேய மொழியில் எழுதியமை
2. திருவிவிலியத்தின் கிரேக்கப் பிரதியை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தமை
3. திருவிவிலியத்தின் எபிரேயப் பிரதியை கிரேக்கமொழியில் மொழி பெயர்த்தமை
4. திருவிவிலியத்தின் எபிரேயப் பிரதியை அரமேய மொழியில் மொழி பெயர்த்தமை
5. திருவிவிலித்தின் இலத்தீன் பிரதியை வல்கேட் என்னும் பெயரில் மொழி பெயர்த்தமை

2) பழைய ஏற்பாட்டின் நூற்பிரிவுகளுள் அடங்காதது
1. பஞ்சாகமம் 2. இறைவாக்கினர் 3. வரலாற்று நூல்கள்
4. ஞானாகமங்கள் 5. திருப்பாடல்கள்

3) ஆபிரகாம் ஈசாக்கைப் பலி செலுத்திய இடம்
1. ஆரான் 2. எகிப்து 3. பெத்தெல் 4. மோரியா 5. சிக்கேம்

4) யாக்கோபு கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி பெற்ற இடம்
1. பெத்தெல் 2. ஏதோம் 3. பெனியேல் 4. பெயர்செபா 5. ஆரான்

5) கொசுக்களின் தொல்லையை உருவாக்க முடிந்தது
1. எகிப்திய மந்திரவாதியால் மட்டுமே 2. ஆரோனால் மட்டுமே
3. ஆரோனுடன் எகிப்திய மந்திரவாதியால் மட்டுமே 4. மோசேயால் மட்டுமே
5. இயற்கையால் மட்டுமே

6) மண்ணால் மனிதனை உருவாக்கல் எதனை அடையாளப்படுத்துகிறது
1. இறைவன் சர்வவல்லமையுள்ளவர் என்பதை
2. பெறுமதியில் குறைந்தவன் என்பதை
3. மனிதன் இறைவன் அல்ல என்பதை
4. வாழ்க்கையின் மறைபொருளான உருவத்தை
5. மனிதன் நிலத்திற்கு மாத்திரமே தொடர்புடையவன் என்பதை

7) உடன்படிக்கை வாழ்வுபற்றி எடுத்துரைத்த இறைவாக்கினர் தொகுதியில் பொருத்தமற்றது
1. எசாயா, ஆமோஸ், ஓசேயா 2. ஆமோஸ், எரேமியா, ஓசேயா
3. எசெக்கியேல், ஆமோஸ், எசாயா 4. எசாயா, எரேமியா, எசேக்கியேல்
5. ஓசேயா, எரேமியா, செக்கரியா

8) ஒரு குருவாகவும் மக்கள் தலைவராகவும் பணியாற்றியவர்
1. மோசே 2. கிதியோன் 3. சாமுவேல் 4. தாவீது 5. சிம்சோன்

9) இயேசு இறையரசைப் போதித்த போது பயன்படுத்திய சக்தி வாய்ந்த செயல்முறையாக அமைவது
1. உவமைகள் 2. புதுமைகள் 3. கற்பித்தல்
4. இரக்கச்செயல்கள் 5. மலைப்பொழிவு

10) நூற்றுவத்தலைவனின் வெளிப்பாடாவது
1. இவர் உண்மையாகவே இறைமகன் 2. இவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்
3. இவர் உயிர்ப்பிலே நம்பிக்கை கொள்வோம் 4. இவரே எம் ஆண்டவர்
5. இவர் எம் மீட்பிற்கு தமதுயிரை ஈந்த இறைமகன்

11) சீனாய் உடன்படிக்கையின் நோக்கமாவது
1. மக்களைக் குருத்துவ அரசராகவும், தூயமக்களினங்களாகவும் மாற்றுவது
2. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக்குவது
3. பன்னிரு கோத்திரங்களுக்கும் தலைவர்களை உருவாக்குவது
4. ஆபிரகாமின் வழித்தோன்றல்களாக்குவது
5. இஸ்ராயேல் இனமாக்குவது

12) யாவேயினால் உயர்த்தப்படுதல், பலப்படுத்தப்படுதல் என்ற பொருளை உணர்த்தும் பெயர்களுடையவர்கள்
1. எசாயா, எசெக்கியா
2. எரேமியா, எசெக்கியேல்
3. எசேக்கியேல், ஆமோஸ்
4. எசாயா, எரேமியா
5. எரேமியா, எசாயா

13) இஸ்ரயேல் மக்கள் இறைகட்டளையை மீறியதால் அவர்கள் பெற்ற தண்டனை
1. இறைசமூகத்திலிருந்து விலக்கப்படல்
2. வாக்குப்பண்ணப்பட்ட பூமியை இழத்தல்
3. நாடுகடத்தப்பட்டவராக இருக்க நேருதல்
4. விசுவாசத்தை மீறிய மக்களாதல்
5. தேர்ந்து கொண்ட மக்கள் என்ற பெயர் அகற்றப்படுதல்

14) மத்தேயு நற்செய்தியின் பிரதான கருத்து
1. நித்திய வாழ்வு
2. அன்பு
3. இயேசுவே மெசியா
4. இறையரசு
5. இறைவார்த்தை

15) இறையரசில் நுழையத்தகுதியுள்ளவர்களாக எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் உவமை
1. கடுகுமணி
2. முத்து
3. புதையல்
4. திராட்சைச் செடி
5. திருமணவிருந்து

16) இயேசுவின் உன்னதசெபம் - இயேசு கற்பித்த செபம் ஆகிய இரண்டிலும் காணப்படும் ஒத்த சிறப்புத் தன்மையாவது
1. அனுதின உணவிற்காக செபித்தல்
2. நாட்டின் சமாதானத்திற்காக செபித்தல்
3. திருச்சபையின் ஒற்றுமைக்காக செபித்தல்
4. தீயோனின் சக்திகளிலிருந்து மீட்கும்படி செபித்தல்
5. தன்னைச் சார்ந்தோருக்காக செபித்தல்

17) இயேசு புதுமைகள் செய்தது
1. உரோமையரிடமிருந்து இஸ்ரயேலரை மீட்க
2. புறவினத்தாரைத் திருச்சபையில் சேர்க்க
3. இறையரசை வெளிப்படுத்த
4. இஸ்ரயேலருக்கு தன் வலிமையைக் காட்ட
5. தான் மெசியா என்பதை உணர்த்த

18) இம்மானுவேல் என்னும் இறைவாக்கை அளித்தவர்
1. செக்கரியா
2. எசாயா
3. ஆமோஸ்
4. யோவேல்
5. திருமுழுக்கு யோவான்

19) உயிர்த்த இயேசுவின் தரிசனங்களுள் ஒன்றான தோமாவுக்குத் தோன்றுதல் மூலம் வெளிப்படுத்தப்படுவது
1. ஆரம்பசீடர்களுக்குள் இருந்த நம்பிக்கை எதிர்கால கிறிஸ்தவர்களுக்குள்ளும் இருக்கவேண்டும்
2. உயிர்ப்பு என்பது மரணத்திலிருந்து இறைவன் எம்மை விடுவித்தல் என்பது
3. நம்பிக்கையற்றவர்கள் தோமாவைப் போல காட்சியருளப்படுவார்கள்
4. கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை தோமாவின் நம்பிக்கை என்பதாகும்
5. அச்சம் தவிர்த்து இறைவனில் நம்பிக்கை கொள்ள வேண்டும்

20) என்தாகத்திற்கு காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள் என்னும் மறைநூல் வாக்கு காணப்படுவது
1. திருத்தூதர்பணியில்
2. திருமடல்களில்
3. திருச்சபையின் ஏடுகளில்
4. திருத்தூதர்களின் மரபில்
5. திருப்பாடலில்

## பகுதி II

❖ **பகுதி I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி II இலிருந்து இரு வினாக்களையும் தெரிந்தெடுத்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி I

1) i) இஸ்ரயேல் மக்களின் சமூகப்பிரிவுகள் நான்கைக் குறிப்பிடுக.

ii) இணைத்திருமுறை நூல்களை அனுமதிக்காத திருத்தந்தையர்கள் இருவரையும், அனுமதித்த சங்கங்கள் இரண்டையும் தருக.

iii) இஸ்ரயேலர் பலநாடுகளினதும் பேரரசுகளினதும் அடிமைத்தனத்திற்கு உள்ளாகினர். இந்நாடுகள், பேரரசுகளில் நான்கைக் குறிப்பிடுக.

iv) பாவத்தில் வீழ்தல் பற்றி தொடக்கநூலில் நான்கு முக்கிய எடுத்துக்காட்டுகள் தருக.

v) ஐந்நூலில் ஒரு சம்பவம் இருமுறை அல்லது அதற்கு மேல் ஒன்றுக்கொன்று வெவ்வேறான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு உதாரணங்கள் நான்கு தருக.

2) i) செங்கடலைக் கடந்து செல்லுதல் பற்றிய நிகழ்வைத் தரும் மரபுகள் இரண்டையும், பாலைவனத்தில் நீர் தொடர்பாக பிரச்சினை ஏற்பட்ட இரு இடங்களையும் தருக.

ii) அமைதியின் புதல்வனின் வருகை பற்றிய செக்கரியாவின் போதனையின் நான்கு அம்சங்களைத் தருக.

iii) விடுதலைப் பயணத்துடன் தொடர்புடைய பிரதான சம்பவங்கள் நான்கு தருக.

iv) இஸ்ரயேல் நாடு இரண்டாகப் பிளவுபடுவதற்கான காரணங்கள் நான்கு தருக.

v) இயேசு உவமைகளின் வாயிலாகப் போதித்தார் என்பதை எடுத்துக்காட்டும் உவமைகள் நான்கு தருக.

3) i) யோவான் நற்செய்தியை எழுதுவதற்காகப் பயன்படுத்திய மூலங்கள் நான்கைத் தருக.

ii) லூக்கா நற்செய்தியாளர் இயேசுவின் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களிடையே பரந்து காணப்பட்டது எனக் காட்டுகின்றார். இங்கு ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதப்படும் நான்கு நபர்களைக் குறிப்பிடுக.

iii) மறுபிறப்பு, மறுவாழ்வு என்னும் எண்ணக்கருக்களை வேறுபடுத்தும் நான்கு அம்சங்களைத் தருக.

iv) இயேசுவை ஏளனம் செய்த நான்கு பிரிவினரை மாற்கு நற்செய்தியிலிருந்து தருக.

v) தூய யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்படும் இறையரசின் அடையாளங்கள் நான்கு தருக.

### பகுதி II

4) i) வரலாற்றுக்குள் ஆபிரகாமை நுழைக்க, ஆசிரியர் முன்வைத்த வரலாற்றுக்கு முற்பட்டகால சம்பவத்தை விளக்குக.

ii) விவிலிய உருவாக்கம் இறைமனித உழைப்பில் உருவாக்கப்பட்டதொன்றாகும் என்பதை விளக்குக.

5) i) இஸ்ரயேலர் பல்வேறுபட்ட கடத்தல்களினூடாக விடுதலை பெற்று வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறினர் என்பதை விளக்குக.

ii) பழைய ஏற்பாட்டில் தொடர்புபடும் உடன்படிக்கைகளைக் குறிப்பிட்டு, சீனாய் உடன்படிக்கையின் தனித்தன்மையையும், முக்கியத்துவத்தையும் விளக்குக.

6) i) இறைவாக்கினரின் அழைப்பின் பொதுப்பண்புகளுள் விருப்பமின்மையும், தைரியப்படுத்தலும் ஆகிய பண்புகளை பெரிய இறைவாக்கினரின் அழைப்பினூடாக விளக்குக.

ii) ஆமோஸ் இறைவாக்கினரின் சமூகநீதி குறித்த போதனையை விளக்கி இன்றைய காலகட்டத்தில் அநீதியை விளைவிக்கும் பல்வேறு துறைகளுக்கு இப்போதனைகள் பொருந்துமாற்றை விளக்குக.

7) i) சமநோக்கு நற்செய்தி பிரச்சனை தொடர்பாக முன்வைக்கும் தீர்வுகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றை விளக்குக.

ii) தூய யோவான் நற்செய்தியின் ஆசிரியத்துவத்தையும் நோக்கத்தையும் ஐந்து விடயங்கள் மூலம் விளக்குக.